1990 சனவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டுகள் மட்டும் அல்ல. வேறு ஒரு தொகுதிக்குத் தாவக்கூடாது என்பதும் நியதி. உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் அந்த நூற்பாலையை ஏற்படுத்தித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டபடி உசிலம்பட்டி பகுதிக்குத் தொழிற்சாலை எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். வராததற்கு என்ன காரணம், ஒருவேளை தொழிலதிபர்கள் பயப்படுகிறார்களா என்பவற்றையெல்லாம் அரசு ஆராயும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு சமீபத்திலே 105 வட்டங்களைத் தொழிற்துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவித்தது. ஆனால் அதேசமயத்தில் என்னுடைய பழனி தொகுதி ஏற்கனவே பின்தங்கிய தொகுதியாக இருந்ததை கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் மாற்றி விட்டார்கள். அதனால் அங்கே தொழிற்சாலைகள் புதிதாக ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லாத காரணத்தால் இப்போது அந்தப் பழனி பகுதி மக்கள் பலர் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். ஆகவே, அதை மீண்டும் தொழிற் துறையிலே பின்தங்கிய பகுதி என்று நம்முடைய முதலமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏன் இந்த மாற்றம் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகுதான் அது குறித்த முடிவை அரசு மேற்கொள்ள இயலும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம்.

*1118—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1990 சனவரி 19

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இதையொட்டி ஒரு கேள்வி நான் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே, இருக்கிற பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டு வந்த பழுப்பு நிலக்கரி பூராவுக்கும் நம் அரசாங்கத்திற்கு வர வேண்டிய ராயல்ட்டி கொடுப்பதாக முன்னே சொல்லப்பட்டு இருந்தது. அது ஏதோ டன்னுக்கு இவ்வளவு என்றுகூட பத்திரிகைகளிலே செய்தி வந்தது. அந்த ராயல்ட்டி எல்லாம் முன்பு இருந்த மத்திய சர்க்கார் கொடுக்கவும் இல்லை. இப்போதாவது அதைப் பெறுவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து அந்தப் பணத்தைப் பெறுவார்களா ? அப்படிப் பெறுவது என்று சொன்னால் எவ்வளவு பணம் நமக்கு வரவேண்டியிருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நெய்வேலி நிலக்கரிச் சுரங் கத்தின் சார்பாக மாநில அரசிற்கு ராயல்ட்டி தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முன்னாள் பிரதமர் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களிடத்திலேயே நான் அரசின் சார்பாக ஒரு கடிதம் கொடுத்தேன். அதற்குப் பிறகு அதிகாரிகள் சார்பிலே அது பேசப்பட்டது. ஏற்கனவே இருந்த அரசுகள் அதற்கான கடிதங்களை எழுதின என்றாலும்கூட, தொடர் முயற்சிகள் இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டு இன்றைய நிலவரப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு விளக்கமாக, 23.37 கோடி ரூபாய் அவர்கள் ராயல்ட்டியாகத் தரவேண்டுமென்றும், ஆனால் இதுவரையிலே தராமல் அந்தத் தொகையை அவர்கள் வைத்திருந்த காரணத்தினால் வட்டித் தொகையையும் சேர்த்து மொத்தமாக 46.41 கோடியை மத்திய அரசு தமிழக அரசிற்கு ராயல்ட்டியாகத் தரவேண்டும் என்றும் அந்த வகையிலே மத்திய அரசை வற்புறுத்தலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டு, மத்திய அரசிடத்திலே அது குறித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த 46.41 கோடி ரூபாய் அன்னியில் இதுவரை பழுப்பு நிலக்கரிக்கு ராயல்ட்டி விதிக்காமல் இருந்ததை மைய அரசுக்கு நாம் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அப்போது, ஏற்கனவே அந்தக் காலத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வந்தபோது இலாபத்திலே பங்கு என்றுதான் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதனால் அவர்கள் இலாபத்தைக் காட்டாமலே இருந்துவிட்டார்களோ, அல்லது இலாபமே

வரவில்லையோ நமக்குத் தெரியாது. இப்போது அந்த ராயல்ட்டி பிரச்சினையில் பழுப்பு நிலக்கரி டன் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசு என்று ராயல்ட்டி தருவதற்கு மைய அரசு இசைவு அளித்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(9–20 மணி)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நெய்வேலியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்ற அந்த ராயலிட்டி தொடர்பாக சற்று கிளையாக போகிற இன்னொரு கேள்வி. அதைப் போலவே அடியக்காமங்கலம், நரிமணம் போன்ற பகுதிகளில் எல்லாம் தஞ்சாவூர் மாவட்டத்தில் எடுக்கப்படுகின்ற அந்த குருட் ஆயில் என்று சொல்கிற கச்சா எண்ணெய்க்கு— இப்போதைய பிரதமர் அசாமில் ஒரு பேரலுக்கு இதுவரை 192 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டு இருந்ததை 100 ரூபாய் கூட்டி ரூ. 292 ஆக அறிவித்து இருக்கிறார்கள். அதைப் போல நமக்கும் இங்கு இருந்து எடுக்கின்ற கச்சா எண்ணெய்க்கு ராயல்ட்டி பெறுகின்ற ஏற்பாடுகள் இருக்கிறதா ? அரசு ஏதாவது பெற்று இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலிக்கே ராயல்ட்டி வேண்டும் என்று வற்புறுத்திய இந்த அரசு நரிமணத்தை விட்டுவிடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஏரலுக்கு அடியில் சேது வாய்க்கால் என்ற கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக பெட்ரோல் ஊற்று இருப்பதாக மத்திய அரசு மூலமாக ஆய்வு செய்து கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. கடந்த 15 தினங்களுக்கு முன்பாக அந்தக் கிராமத் திலே கிணறு தோண்டும்போது மீண்டும் அங்கு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழுப்பு நிலக்கரியி லிருந்தா Petrol எடுக்கிறார்கள் ? இந்த வினாவில் அந்த வினாவை எழுப்பக்கூடாது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலி பகுதியில் அதையொட்டி இருக்கின்ற திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த ஜெயங்கொண்டம் பகுதியிலே இந்த மாதிரி பழுப்பு நிலக்கரி படிவங்கள் ஏராளமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டதாக செய்தி வந்து இருக்கிறது. 3-வது அனல் மின்சார

திட்டம் தொடங்குகிறபோது அந்தப் பகுதியில் தொடங்குவ தாக ஒரு ஏற்பாடு இருப்பதாக அறிகிறோம். அதையொட்டி தமிழக அரசினால் பழுப்பு நிலக்கரியை வைத்து நாம் தனியாக நம்முடைய மின்சார இலாக்கா மூலம் மின்சார உற்பத்தி செய்வதற்கு பழுப்பு நிலக்கரியைப் பெறுவதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது என்று விளம்பரப்படுத்தப்பட்டது. அது எந்த நிலையில் உள்ளது? 3-வது அனல் மின்சார நிலையம் வருவதற்கு நம்முடைய தமிழக அரசு முயற்சி எடுத்து வரு கிறதா? அதற்கு ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா? சமீபத்தில் நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீரைப் பருகியதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராம மக்கள் வயிற்றுப் போக்கு நோயினால் அவதிப்படுகிறார்கள். இது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா? அதைத் தடுப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறையக் கேள்விகளை அடுக்கி ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அவ ருடைய கேள்வியின் முதல் பகுதிக்கு விளக்கம், வரகூர் ஜெயங்கொண்டம் பகுதிகளில் பழுப்பு நிலக்கரி படிவங் களுக்கான துரப்பண ஆய்வுகள் மைய அரசின் கனிம அமைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்து மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வருவதற்கான வாய்ப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூன்றாவது சுரங்கத் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. என்றாலும் கூட, ஒப்புதலை எதிர்நோக்கி முன்னோடி நடவடிக்கையாக தென் ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 37 கிராமங்களில் உள்ள 11,410 எக்டேர் நிலங்களைக் கையகப்படுத்தி அந்த நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்காக அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் கட்டமாக 1,385 எக்டேர் நிலங்களைக் கையகப்படுத்தி ஒப்படைக்குமாறு அந்த நிறு வனத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையை அடுத்து மேற்படி நிலங்களைக் கையகப்படுத்தத் தேவையான சிறப்பு நில எடுப்புப் பணியாளர்களை நியமனம் செய்யக்கோரும் செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றிக் கூறினார்கள். அது குறித்தும் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.